புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஏப்ரல் 25, 2024 • புரட்சி 24 • முழக்கம் 15 • விலை ரூ.3.00

## தோல்வி பயத்தில் தரம்தாழ்ந்து பேசும் நரேந்திர மோடி?

# தகுதி நீக்கம் செய்யுமா தேர்தல் ஆணையம்!

10 ஆண்டுகால ஆட்சியை நிறைவு செய்யும் நரேந்திர மோடி, சாதனைகளைச் சொல்லி மக்களிடம் ஓட்டு கேட்க முடியாத அவலத்தில் இருக்கிறார். பணமதிப்பழிப்பு கொண்டு வந்து பல லட்சக் கணக்கானோரை வரிசையில் நிற்க வைத்து, அதில் ஆயிரக்கணக்கானோரை உயிரிழக்க வைத்ததுதான் பாஜக ஆட்சியின் சாதனை. ஜிஎஸ்டியை திணித்து பல்லாயிரக்கணக்கான சிறு குறு நிறுவனங்களுக்கு பூட்டுப் போட வைத்ததுதான் பாஜக அரசின் சாதனை. பெரு நிறுவனங்களுக்கு சாதகமாக வேளாண் சட்டங்களை திருத்தியமைத்து விவசாயிகளின் பெருங் கோபத்தை பெற்றதுதான் பாஜக அரசின் சாதனை. கொரோனா பேரிடரில் கொத்து கொத்தாக மக்கள் செத்து கொண்டிருந்தபோது வாசலில் நின்று கை தட்டுங்கள், விளக்கு ஏற்றுங்கள் என்று சொன்னதுதான் பாஜக அரசின் சாதனை.

ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்புகள் தருகிறோம் என்று உறுதியளித்துவிட்டு, இருக்கிற வேலைகளையும் பறித்ததுதான் பாஜக அரசின் சாதனை. சுவிஸ் வங்கிகளில் பதுக்கப்பட்ட கருப்புப் பணத்தை மீட்டு, எல்லோர் வங்கிக் கணக்கிலும் ரூ.15 லட்சம் தருகிறோம் என்று வாக்குறுதி அளித்துவிட்டு, குறைந்தபட்ச தொகையை பராமரிக்கவில்லை என்று வங்கிகள் 5 ஆண்டுகளில் 21,000 கோடி ரூபாயை வசூலிக்க வைத்ததுதான் பாஜக அரசின் சாதனை. இந்த சாதனைகளையெல்லாம் மக்கள் மத்தியில் பேசினால் 200 தொகுதிகள் கூட தேறாது. அதனால் இம்முறை சாதனைகளைச் சொல்லி வாக்கு கேட்பதை விட, ஜாதியையும் மதத்தையும் சொல்லி பெரும்பான்மை இந்துக்களின் வாக்குகளை அறுவடை செய்வது என்று நேரடியாக ஆர்.எஸ்.எஸ்.ஸின் அஜெண்டாவை கையிலெடுத்துவிட்டது பாஜக.

பிரதமர் மோடியின் பேச்சுக்கள் அப்படித்தான் இருக்கின்றன. ராஜஸ்தான் மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, “காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது, தேசத்தின் செல்வத்தில் முஸ்லீம்களுக்கு முதல் உரிமை உண்டு என்று சொன்னார்கள். இதன் பொருள் அவர்கள் இந்தச் செல்வத்தை அதிக குழந்தைகளைப் பெற்றவர்களுக்கும், ஊடுருவல்காரர்களுக்கும் பகிர்ந்தளிப்பார்கள். நீங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்ததை ஊடுருவியவர்களுக்கு தர போகிறீர்களா.. பெண்கள் வைத்திருக்கும் தங்கத்தை கணக்கிட்டு, அந்த செல்வத்தை பங்கீடு செய்வோம் என்று காங்கிரஸின் தேர்தல் அறிக்கை கூறுகிறது. மன்மோகன் சிங் தலைமையிலான அரசு, முஸ்லீம்களுக்கு செல்வத்தில் முதல் உரிமை உண்டு என்று கூறியது. இந்த நகர்ப்புற நக்சல் சிந்தனை என் தாய்மார்கள் மற்றும் சகோதரிகளின் மாங்கல்யத்தை கூட விட்டுவைக்காது.” என்றார்.

மோடி பேசிய கருத்துக்கள் அப்பட்டமான பொய், உண்மைக்கு மாறானவை. மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் இந்துக்களுக்கும் இசுலாமியர்களுக்குமான குழந்தை பிறப்பு விகிதத்தில் பெரிய மாறுபாடு இல்லை. தேசிய குடும்பநல சுகாதார ஆய்வு 5-இன் படி இசுலாமிய பெண்கள் கருத்தரித்தல் விகிதம் 2.36ஆக உள்ளது. இந்துப் பெண்கள் கருத்தரித்தல் விகிதம் 1.94ஆக உள்ளது. வெறும் .42 மட்டுமே வித்தியாசம். அப்படிப் பார்த்தால் தமிழ்நாட்டில் பெண்கள் கருத்தரித்தல் விகிதம் 1.8-ஆக மட்டுமே உள்ளது. ஆனால் உத்தரப் பிரதேசத்தில் 2.4ஆகவும், பீகாரில் 3.0ஆகவும் உள்ளது. ஆக, உத்தரப் பிரதேசத்திலும், பீகாரிலும் அதிக குழந்தைகளை பெற்றுக்கொண்டு நாட்டின் செல்வங்களை சுரண்டுகிறார்கள் என்று பிரதமர் மோடி பேசிவிடுவாரா என்ற கேள்வி எழுகிறது. ஏனென்றால், தமிழ்நாடு செலுத்தும் ஒவ்வொரு ஒரு ரூபாய்க்கும் 29 காசு மட்டுமே திரும்பி வருகிறது. ஆனால் உத்தரப் பிரதேசத்திற்கு 2.73 ரூபாயாகவும், பீகாருக்கு 7 ரூபாயாகவும் திருப்பிக் கொடுக்கப்படுகிறது.

மோடியைத் தொடர்ந்து மற்ற பாஜகவினரும் மிகத் துணிச்சலாக சிறுபான்மையினருக்கு எதிராகப் பேசத் தொடங்கியுள்ளனர். நடைபெற இருக்கும் தேர்தலே 80 %-க்கும் 20%-க்கும் இடையிலான தேர்தல் என்று உத்தரப் பிரதேச துணை முதல்வர் கேசவ் பிரசாத் மவுரியா எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதாவது 80% என்பது இந்துக்களின் மக்கள்தொகையாம். 20% என்பது இசுலாமியர்களின் மக்கள் தொகையாம். நடைபெற இருக்கும் தேர்தலானது பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும், காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணிக்கும் இடையிலான போட்டி. 80% இந்துக்கள் பாஜகவின் பக்கம் நிற்பார்கள் என்று கூறுவார்களேயானால், தமிழ்நாட்டு மக்கள் பாஜகவை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. அதனால் தமிழ்நாட்டில் இந்துக்களே இல்லை என்று அறிவித்து விடுவார்களா என்ற கேள்வியும் எழுகிறது.

அதேபோல மன்மோகன் சிங் நாட்டின் சொத்துக்களை இசுலாமியர்களுக்கு பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று பேசியிருக்கிறார் என்றும் மோடி கூறினார். அதுவும் அப்பட்டமான பொய். மோடி குறிப்பிடும் வீடியோ 2006-இல் மன்மோகன் சிங் பேசியது. “தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், பெண்கள் மற்றும் இசுலாமியர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினருக்கு நாட்டின் வளர்ச்சி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்” என்றுதான் மன்மோகன் சிங் பேசியிருந்தார். விளிம்புநிலையில் உள்ள மக்களுக்கான பகிர்வுதான் உண்மையான சமத்துவத்தைக் கொடுக்கும் என்பதுதான் மன்மோகன் சிங் பேச்சில் கூறியது.

இதற்கு முன்பு எந்த பிரதமரும் பேசத் துணிந்திராத எல்லைக்குச் சென்று, மிக அநாகரீகமான வார்த்தைகளை உதிர்த்திருக்கிறார் நரேந்திர மோடி. மதச்சார்பற்ற அரசியலமைப்பு சட்டத்தின்படி பதவியேற்ற ஒரு பிரதமர் சாதாரண காலங்களில் இப்படி பேசுவதே பேராபத்தானது. ஆனால் தேர்தல் காலத்தில் வெறுப்புப் பேச்சுக்களை பேசக்கூடாது என்ற விதிமுறைகளை மீறி மிகத் துணிச்சலாக இப்படி பேசியிருக்கிறார் நரேந்திர மோடி. இதுவரை தேர்தல் ஆணையத்திற்கு 16,000-க்கும் அதிகமானோர் மோடியின் பேச்சு மீது நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் அனுப்பிவிட்டனர்.

மோடியின் பேச்சானது தேர்தல் நடத்தை விதிகள், (ஆ) பிரிவுகள் 123(3) மற்றும் (3 ஏ), 125 ஆகியவற்றை மீறுவதாகும். மக்கள் சட்டம், 1951 மற்றும் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 153A-இன் படி இது தண்டிக்கத்தக்கது என்று ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம், பி.யு.சி.எல். போன்ற மனித உரிமை அமைப்புகளும் தேர்தல் ஆணையத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளன. பிரதமர் மோடியை தகுதிநீக்கம் செய்ய வேண்டுமென்பதே அனைத்து

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

# தோழர் சங்கீதாவை தாக்கியவர்களுக்கு பிணை மறுப்பு!

பாஜகவினர் கழகத் தோழர் சங்கீதாவை தாக்கிய வழக்கில் குற்றவாளிகளுக்கு முன் பிணை மறுத்து திருப்பூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

திருப்பூர் ஆத்துப்பாளையம் பகுதியில் நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட பாஜகவினரிடம் அப்பகுதி மக்கள் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளனர். அப்போது அங்கிருந்த தோழர் சங்கீதாவும் பாஜகவினரிடம் ஜி.எஸ்.டி. குறித்து கேள்விகள் எழுப்பியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த பாஜகவினர் தோழர் சங்கீதாவின் கடையை தேடிச் சென்று, தனியாக இருந்த அவரை தரம் தாழ்ந்த வார்த்தைகளால் வசைபாடியதுடன், கொலைவெறித் தாக்குதலும் நடத்தியுள்ளனர்.

இத் தாக்குதலில் ஈடுபட்ட பாஜக பொறுப்பாளர் சின்னச்சாமி உள்ளிட்ட 5 பேரை கைது செய்த கோரி 15 வேலம்பாளையம் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகள் தேடப்பட்டு வந்தனர்.

இந்நிலையில் குற்றவாளிகள் தங்களுக்கு முன்



பிணை தர வேண்டும் என்று கூறி திருப்பூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் கோரிக்கை மனு சமர்ப்பித்திருந்தனர்.

இந்த முன் பிணை வழக்கின் விவாதம் ஏப்ரல் 22 அன்று காலை 11 மணியளவில் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

அப்பொழுது நீதிமன்றத்தில் தோழர் சங்கீதாவுக்கு ஆதரவாக தோழர் ப.பா. மோகன் மற்றும் திராவிடர் கழக வழக்கறிஞர் பாண்டியன் ஆகியோர் குற்றவாளிகளுக்கு பிணை வழங்கக் கூடாது என்று ஆஜராகி வாதிட்டனர்.

முதன்மை அமர்வு நீதிபதி அவர்கள் பாஜகவினர் தோழர் சங்கீதா மீது நடத்திய கொலை வெறி தாக்குதல் காணொளியை பார்த்தார்.

அதன் பின்பு இந்த வழக்கில் முன்பிணை வழங்குவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று கூறி முன் பிணை கோரி குற்றவாளிகள் விண்ணப்பித்த கோரிக்கை மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் தோழர் சங்கீதா அவர்களுடன் கழகத்தின் மாவட்ட தலைவர் தோழர் முகில் ராசு, தெற்கு பகுதி பொறுப்பாளர் ராமசாமி, 15 வேலம்பாளையம் பொறுப்பாளர் மாரிமுத்து, மாநகர அமைப்பாளர் தனபால், கழகத் தோழர் ராஜ்குமார், கழக சமூகவலைதளப் பொறுப்பாளர் பரிமள ராசன் உள்ளிட்ட தோழர்கள் உடனிருந்தனர்.

தலையங்கம்

# ஆரிய மாடலும், திராவிட மாடலும்!

2023ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் நாள் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை திறந்துவைத்து பிரதமர் மோடி, உள்ளே செங்கோலை நிறுவினார். அரசியலமைப்புச் சட்டப்படி செயல்படும் நாட்டில் செங்கோல் வைப்பது ஏன் என்ற கேள்வி ஒருபுறம் இருக்க, திறப்பு விழாவில் இந்த நாட்டின் முதல் குடிமகளே நிராகரிக்கப்பட்ட பேரவலம் நடந்தது. பாலிவுட் நடிகைகள் கூட நாடாளுமன்றக் கட்டடத் திறப்பு விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவுக்கு மட்டும் அழைப்பு இல்லை. காரணம் அவர் ஒரு பழங்குடிப் பெண், அதை விட மிக முக்கியமாகக் கணவரை இழந்த பெண். ஒரு விதவையை நாடாளுமன்றத் திறப்பு விழாவுக்கு அழைக்கக்கூடாது என்ற சனாதன சிந்தனையே அதற்குப் பின்னால் ஒளிந்திருந்தது. அதுதான் ஆரிய சனாதன மாடல்.

இப்போது மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அறங்காவலர் குழு நியமன விவகாரத்திலும் சனாதன தர்மம் என்றால் என்ன என்று சங்கிகள் மிக அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சரான பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் அவர்களின் தாயார் ருக்மணி அம்மாளை, மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அறங்காவலர் குழுத் தலைவராக கடந்த ஆண்டு நவம்பரில் தமிழ்நாடு அரசு நியமித்தது. சித்திரைத் திருநாள் நிகழ்ச்சியில் அறங்காவலர் குழு தலைவரிடம் செங்கோல் வழங்குவதே கோயில் வழக்கமாக இருக்கிறது. கைம்பெண்ணாக இருந்தாலும் ஆன்மிகப் பணிகளில் ஈடுபடலாம், செங்கோலைப் பெறலாம் என்பதுதான் திராவிட மாடல்.

ஆனால் ருக்மணி அம்மாள் கணவரை இழந்தவர், எனவே அவரிடம் செங்கோலை கொடுக்கக்கூடாது என்று மதுரையைச் சேர்ந்த தினகரன் என்பவர் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு தொடுத்தார். ஆகம விதியின்படி திருமணம் ஆகாதவரோ, கணவன் அல்லது மனைவியை இழந்தவரோ செங்கோலை பெற்றுக்கொள்ள இயலாது என்றும் அவர் வாதிட்டார். ஆனால் மனுதாரரின் முறையீட்டை நிராகரித்த உயர்நீதிமன்ற மதுரைக்கிளை, இந்த நவீன காலத்திலும் இதுபோன்ற அபத்தமான கருத்துக்களை முன்வைப்பதா எனக் கண்டித்து வழக்கை தள்ளுபடி செய்தது.

சனாதனம் என்ற பெயரால் சமூகத்தை பின்னோக்கி இழுக்க முயலும் சங்கிக் கூட்டத்திற்கு சவுக்கடியாய் இத்தீர்ப்பு அமைந்திருக்கிறது. இச்சமயத்தில் இன்னொரு வரலாற்றையும் புரட்டிப் பார்க்க வேண்டியது அவசியம். 2001ஆம் ஆண்டு அக்டோபரில் தமிழ்நாடு தேர்வாணையக் குழு கோயில் நிர்வாக அதிகாரிகள் பதவிக்கான அறிவிப்பாணையை வெளியிட்டது. அதில் பெண்கள் விண்ணப்பிக்கக் கூடாது என்ற அறிவிப்பை எதிர்த்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கை நடத்தியவர் மூத்த வழக்கறிஞர் துரைசாமி. அந்த வழக்கில் பெண்களுக்கு விண்ணப்பிக்க விதிக்கப்பட்ட தடை ரத்து செய்யப்பட்டது. 22 பெண்கள் அறநிலையத்துறை அதிகாரிகள் ஆனார்கள் என்பது வரலாறு.

இப்போது அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராலாம் சட்டப்படி, பெண்கள் சில கோயில்களில் ஓதுவார்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த பண்பு மேலும் வளர்ந்து அர்ச்சகர்களாகவும் பெண்கள் நியமிக்கப்பட வேண்டும். அதைநோக்கி சமூகத்தை முன்னகர்த்துவதே சமத்துவத்தை வளர்க்கும். அதைவிடுத்துவிட்டு, மீண்டும் பின்னோக்கி இழுக்க முயற்சிப்பது ஆரிய சனாதன மாடல். அத்தகைய முயற்சியை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை தொடக்க நிலையிலேயே கிள்ளி எறிந்திருப்பது வரவேற்கத்தக்கது.

## வினா விடை

• கோவையில் 1 லட்சம் பாஜக ஆதரவு வாக்குகளை காணவில்லை

**- அண்ணாமலை புகார்**

**பதில்: ஜூன் 4-ஆம் தேதி சொல்ல வேண்டிய பதிலை அவசரப்பட்டு சொல்லிட்டீங்களே அண்ணாமலை!**

• நாட்டு மக்கள் மரணம் அடைந்த பிறகும் வரி வசூலிக்க காங்கிரஸ் திட்டம் : பிரதமர் மோடி

**- செய்தி**

**பதில்: குரங்கு பொம்மை என்ன விலை என்ற காமெடி போல் இருக்கிறது. சுடுகாடு அமைக்க ஜி.எஸ்.டி. போட்டதே நீங்கள்தான் ஜீ**

• அதிமுகவை கைப்பற்ற சசிகலா அதிரடி வியூகம் **- செய்தி**

**பதில்: அதிமுகவை பாஜக விழுங்கி செரித்துவிட்டதே!**

• சூரத்தில் பாஜக வேட்பாளரைத் தவிர மற்ற எல்லோரும் மனுக்களை வாபஸ் பெற்றனர்

**- செய்தி**

**பதில்: தேர்தல் ஆணையத்தை கலைத்துவிட்டால் தேர்தல் நடத்தும் வேலையே மிச்சமாகிவிடுமே!**

• வணிகர்கள் அவதிப்படுவதால் தமிழ்நாட்டில் தேர்தல் நடத்தை விதிகளை தளர்த்த வேண்டும் : ராமதாஸ் வேண்டுகோள்!

**- செய்தி**

**பதில்: மருத்துவர் அவர்களே தைலாபுரத்து மாம்பழ வியாபாரத்துக்கு எதுவும் பாதிப்பில்லையே!**

## கல்வி - வேலை குறித்து பேச மறுக்கும் ஊடகங்கள்!

கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சியில் இருப்பது பாரதிய ஜனதா கட்சி. ஆனால் சில முன்னணி தேசிய ஊடகங்களில் இப்போதும் எதிர்க்கட்சிகளே கடும் தாக்குதலுக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில் இரவு 8 மணிமுதல் 10.30 மணிவரை அதிகமானோர் செய்திகளை பார்க்கின்றனர். அதனால் இந்த நேரத்தை பிரைம் டைம் என்பார்கள். பிப்ரவரி 1 முதல் ஏப்ரல் 12 வரை இந்த நேரத்தில் பல முக்கிய ஊடகங்கள் விவாதித்த தலைப்புகள் மற்றும் உள்ளடக்கங்கள் குறித்து நியூஸ் லாண்டரி ஊடகம் பகுப்பாய்வு செய்துள்ளது. ரிபப்ளிக் டிவி, நியூஸ் 18, டைம்ஸ் நவ், சி.என்.என்.- நியூஸ் 18, ஆஜ் தக் உள்ளிட்ட 6 தொலைக்காட்சிகளில், 6 நெறியாளர்களின் 429 நிகழ்ச்சிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இதில் எதிர்க்கட்சிகளுக்கு எதிராகவே 52% விவாதங்கள் நடைபெற்றுள்ளன. வெளிப்படையாக பாஜகவுக்கு ஆதரவாக 27% விவாதங்கள் நடந்துள்ளன. ஒன்றிய அரசுக்கு எதிரான விவாதங்கள் மிகச் சொற்பமாக 1.4% அளவில் மட்டுமே நடந்திருக்கிறது. 10 ஆண்டுகால மோடி ஆட்சியின் கல்வி- வேலைவாய்ப்பு நிலைகள் குறித்து 1.1% மட்டுமே விவாதிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய நடுநிலையற்ற ஊடகங்கள் வெளியிட்ட கருத்துக்கணிப்புகளும் நம்பகத்தன்மை அற்றதாகவே உள்ளன. எதார்த்த கள நிலவரத்தை மறைத்து, கருத்துருவாக்கம் செய்ய முயற்சிப்பதாகவுமே இருக்கின்றன.

## சாமியார் ராம்தேவா? சாவர்க்கர் ராம்தேவா?

கொரோனாவுக்கான முதல் மருந்து என்று பொய்யான தகவல்களுடன் விளம்பரம் வெளியிட்ட பதஞ்சலி நிறுவனத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் பதஞ்சலி நிறுவனர் பாபா ராம்தேவை கடுமையாகக் கண்டித்த உச்சநீதிமன்றம், செய்தித்தாள்களில் பொது மன்னிப்பு கேட்டு விளம்பரம் வெளியிடுமாறு உத்தரவிட்டது.



UNCONDITIONAL PUBLIC APOLOGY

In wake of on going matter before the Hon'ble Supreme Court of India (Writ Petition C. No. 645/2022), we in our individual capacity as well as on behalf of the Company, unconditionally apologise for the non-compliance or disobedience of directions/ orders of the Hon'ble Supreme Court of India.

We unconditionally extend the apology for holding meeting/press conference dated 22.11.2023. We earnestly apologize for the mistake made in publishing our advertisements and it is our whole-hearted commitment that such errors will not be repeated. We undertake to abide by directions and instructions of the Hon'ble Court with due care and utmost sincerity. We undertake to uphold the majesty of the court and comply with applicable laws and directions of the Hon'ble Court of law/relevant authorities.

Sincerely,

Patanjali Ayurved Limited,
Acharya Balkrishna,
Swami Ramdev,
Haridwar, Uttarakhand

ஆனால் லென்ஸ் வைத்து தேடும் அளவுக்கு மிகச் சிறிய அளவில் விளம்பரம் வெளியிடப்பட்ட நிலையில், உச்சநீதிமன்றம் மீண்டும் கண்டனம் தெரிவித்துள்ளது. வழக்கமாக பொது மன்னிப்பு வெளியிடப்படும் அளவில், மன்னிப்பு கேட்க வேண்டுமென்று பதஞ்சலி நிறுவனத்துக்கு மீண்டும் எச்சரித்துள்ளது உச்சநீதிமன்றம். அத்துடன், பொய் விளம்பரங்கள் மீது நடவடிக்கை எடுக்காதது குறித்து ஒன்றிய அரசு பதிலளிக்க வேண்டுமென்றும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். மருந்து விளம்பரங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கும் பிரிவு 170 ஏன் திடீரென்று நீக்கப்பட்டது என்றும் கேள்வி எழுப்பியுள்ள நீதிபதிகள் வழக்கு விசாரணையை ஏப்ரல் 30-ஆம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளனர்.

### முதல் பக்கத் தொடர்ச்சி

தரப்பினரின் வேண்டுகோள். ஆனால் தேர்தல் ஆணையமோ, இதுவரை எந்த நடவடிக்கையும் மோடி மீது எடுக்கவில்லை. தேர்தல் ஆணையம் பாரபட்சமாக செயல்படுகிறது, பாஜகவின் கிளை போல செயல்படுகிறது என்ற விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்திடவாவது நடவடிக்கை எடுக்க துணிந்திருக்கலாம். ஆனால் அதற்கான சிறு முயற்சிகளில் கூட இதுவரை ஈடுபடவில்லை என்பது தேர்தல் ஆணையத்தின் நம்பகத் தன்மையை மேலும் கேள்விக்குள்ளாக்குகிறது.

ஏற்கெனவே கோவையில் 10 மணிக்கு மேல் அண்ணாமலை பிரச்சாரம் செய்து, அதை தட்டிக்கேட்ட திமுகவினர் மீது பாஜகவினர் தாக்குதல் நடத்திய விவகாரத்திலும் தேர்தல் ஆணையம் மந்தமாகவே செயல்பட்டது. நயினார் நாகேந்திரனுக்கு நெருக்கமானவர்கள் 4 கோடி ரூபாய் எடுத்துச்சென்று பிடிபட்டது தொடர்பாக விசாரிக்க தேவையில்லை என்று வெளிப்படையாகச் சொல்கிறது அமலாக்கத்துறை. குஜராத் மாநிலம் சூரத் தொகுதியில் பாஜக வேட்பாளர் முகேஷ் தலால் தவிர அனைத்து வேட்பாளர்களின் வேட்புமனுக்களும் கடைசி நாளில் திரும்பப்பெறப்பட்டன. காங்கிரஸ் வேட்பாளர் நிலேஷ் கும்பானியின் வேட்புமனு கடைசி நேரத்தில் நிராகரிக்கப்பட்டது. முன்மொழிந்த 4 பேரும் அது தங்கள் கையெழுத்து இல்லை எனக் கூறியதால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இது தற்செயலாக நடந்தது என்றால் நம்பும்படியாக இல்லை. தொடர்ந்து பலமுறை பாஜக வென்ற சூரத் தொகுதியிலேயே இதுபோன்ற மோசடித்தனங்களை அரங்கேற்றியே வெற்றி பெற வேண்டிய நிலையில் பாஜக இருக்கிறது. தேர்தல் தோல்வி அச்சத்தில் எத்தகைய கீழான நிலைக்கும் செல்ல பாஜகவும், மோடியும் தயார் என்பதையே இவை உணர்த்துகின்றன.

# பாரதத்தை எதிர்த்து இந்தியா பக்கம் நிற்பது ஏன்?

(நிமிர்வோம் வாசகர் வட்டத்தின் சார்பில் 14.04.2024 அன்று திவிக தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற 20-வது கூட்டத்தில் ர.பிரகாசு ஆற்றிய உரை)

**ர.பிரகாசு**

பாரதமா அல்லது இந்தியாவா? என்கிற விவாதத்தில் நாம் எந்த பக்கம் நிற்கிறோம் என்பதை தெளிவுபடுத்த வேண்டியது அவசியமானது. அதனால்தான் பாரதமும், ஆர்.எஸ்.எஸ்.ஸும் என்ற தலைப்பைக் கொடுத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். தனித் தமிழ்நாடு கொள்கையைக் கொண்ட திராவிட இயக்கம் இந்தியா பக்கம் நிற்க வேண்டிய தேவை எங்கே எழுகிறது என்ற கேள்வியை சிலர் முன்வைக்கிறார்கள். ம.பொ.சி.-யை தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிற தமிழ்தேசியர்களிடம் இருந்தே இக்கேள்வி பெரும்பாலும் எழுகிறது. தெற்கெல்லை போராட்டத்தில் பெரியார் எடுத்த நிலைப்பாடுதான் இதற்கும் சரியான பதிலாகும் என்று கருதுகிறேன். தேவிக்குளம், பீர்மேடு என்ற 2 பகுதிகளை தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டுமென்ற போராட்டம் எழும்போது, முதலில் தட்சணப் பிரதேசத்தில் இருந்து நாம் தமிழ்நாட்டைக் காக்க வேண்டுமென்று பெரியார் கூறினார்.

அதாவது, முதலில் தலையைக் காப்போம், பிறகு தலைப்பாகையை காப்போம் என்பது பெரியாரின் நிலைப்பாடாக இருந்தது. அதேபோலத்தான் இப்போதும் இந்தியாவை முதலில் காக்க வேண்டிய காலச்சூழலுக்கு 10 ஆண்டுகால பாஜக ஆட்சி நம்மைத் தள்ளியிருக்கிறது. இந்தியா பாரதம் ஆகிவிட்டால், எதை நோக்கி நகரும் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். இந்தியா என்பது மிச்சசொச்ச ஜனநாயகத்தின் இருப்பாக இருக்கும். ஆனால் பாரதம் என்பது இந்து ராஜ்ஜியத்தை நோக்கி நம்மை இழுத்துச் செல்லும். அதனால் நாம் இன்றைய காலச்சூழலில் பாரதத்திற்கு எதிராக இந்தியாவின் பக்கம் நிற்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

### பாரதம் சர்ச்சை வலுத்தது எப்போது?

இந்தியா என்பதையே மறுத்துவிட்டு பாரதியம் என்ற சொல்லாடலை மட்டுமே பாஜக பயன்படுத்தத் தொடங்கியது 2023ஆம் ஆண்டு ஜூலையில்தான். எதிர்க்கட்சிகள் கூட்டணிக்கு ‘இந்தியா’ எனப் பெயரிட்டதை அடுத்து நாட்டின் பெயரை இந்தியா என்பதற்கு பதிலாக பாரதம் என்று பயன்படுத்தும் முடிவுக்கு அக்கட்சி வந்தது. தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கையில் இனி பாடத்திட்டங்களில் ‘பாரத்’ என்று மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்று கூறியது. ஆனால் “இந்தியா, பாரதம் இரண்டுமே பயன்பாட்டில்தான் உள்ளது. பாரதம் என்று மட்டும் பயன்படுத்த முடியாது” என கேரள அரசு வழக்கு தொடர்ந்தது. ஜி20 நாடுகளின் டெல்லி மாநாட்டுக்கு குடியரசுத் தலைவர் அனுப்பிய அழைப்புக் கடிதத்தில் கூட *President of bharath* என்றே பயன்படுத்தினார்கள். அப்படியானால் ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியா என்பதை ரிசர்வ் பேங்க் ஆஃப் பாரத் என்றும், இந்திய வெளியுறவுத்துறை என்பதை பாரத வெளியுறவுத்துறை என்றும் மாற்றுவீர்களா என்று கேள்வி எழுப்பினார் கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார்.

அரசியலமைப்புச் சட்டத்திலேயே பாரத் என்று இருக்கிறது, அதனால் இனி பாரத் என்றே அழைப்போம் என்றெல்லாம் பாஜகவினர் விளக்கம் கொடுத்தார்கள். ஆனால் 2016ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றத்தில் இதுதொடர்பாக ஒரு பொதுநல வழக்கு தொடரப்பட்டது. இனி எல்லா வகையான பயன்பாட்டுக்கும் நாட்டின் பெயரை பாரத் என்றே அழைக்க உத்தரவிட வேண்டுமென்பது மனுதாரரின் முறையீடு. டி.எஸ். தாக்கூர், யு.யு.லலித் அமர்வில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, “அரசியலமைப்பு சபையில் நீண்ட விவாதத்திற்கு பிறகே இம்முடிவு எடுக்கப்பட்டது. எனவே இதற்காக *Article 1*-இல் திருத்தம் செய்ய வேண்டிய எந்த அவசியமும் ஏற்படவில்லை” என்று தீர்ப்பளித்தனர். இந்த வழக்கில் பதிலளித்த ஒன்றிய உள்துறை அமைச்சகமும் இதே பதிலையே தெரிவித்தது. ஆனால் அடுத்த 7 ஆண்டுகளில் பாரதம் என்றுதான் சொல்ல வேண்டுமென்ற நிலைக்கு பாஜகவை தள்ளியது எதிர்க்கட்சிகளின் கூட்டணிதான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. மீண்டும் 2020-இல் இதே கோரிக்கையுடன் ஒரு வழக்கு தொடரப்பட்டபோதும், உச்சநீதிமன்றம் அதற்கான தேவை இல்லை என்றுகூறி நிராகரித்தது.

### ‘ஒன்றியம்’ என்பதை ஏற்க தயாரா?

அரசியலமைப்புச் சட்டத்தில் பாரத் என்று இருப்பதால் அப்படியே அழைக்க வேண்டுமெனச் சொல்பவர்களுக்கு இன்னொரு கேள்வியையும் நாம் எழுப்ப வேண்டியுள்ளது. *India that is Bharath* என்பதுடன் சேர்த்து *shall be a union of states* என்பதும் உள்ளது. பாரத் என்பதை மட்டும் ஏற்றுக்கொள்ளும் சங்கிகள் இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் என்பதை மட்டும் ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்? ஏன் ஒன்றிய பாஜக அரசு மாநிலங்களின் உரிமையை நசுக்குகிறது? “இந்தியா என்பது கிழக்கிந்திய கம்பெனி கொடுத்த பெயர். பாரதம் என்பது 7,000 ஆண்டுகளாக வழக்கத்தில் உள்ள பெயர். பாம்பே மும்பை ஆனதுபோல இதுவும் ஒரு சாதாரண மாற்றம்” என்றும் பாஜகவினர் விளக்கம் தர முயன்றனர். சரி, இந்து என்ற பெயர் எத்தனை ஆயிரம் வருடங்களாக புழக்கத்தில் இருக்கிறது? அதுவும் ஆங்கிலேயர் கொடுத்த பெயர்தானே? அதை மாற்றவோ அல்லது ‘இந்து’ என்ற சொல்லை பயன்படுத்தாமல் தவிர்க்கவோ பாஜக, ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கு துணிச்சல் இருக்கிறதா?

வெறும் அரசியலுக்காக மட்டுமே ‘பாரத்’ என்ற சொல்லை பாஜக பயன்படுத்துகிறதா என்றால் நிச்சயம் இல்லை. ஆங்கிலேயர் ஆட்சிக்கால அடையாளங்கள், முகலாயர் ஆட்சிக்கால அடையாளங்களை அழிக்க வேண்டுமென்பது ஆர்.எஸ்.எஸ்.ஸின் செயல்திட்டங்களில் ஒன்று. கடந்த ஆண்டு செப்டம்பரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், “இனி இந்தியா என்று யாரும் சொல்ல வேண்டாம். பாரத் என்றே பயன்படுத்துவோம். உலகில் எங்குமே சிறப்புப் பெயர்களை மாற்ற மாட்டார்கள். பாரதம் என்பது நமக்கு சிறப்புப் பெயர்” என்று பேசினார்.

ஆர்.எஸ்.எஸ். தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே ‘இந்தியா’ என்பது இந்துக்களின் ராஜ்ஜியமாக மாற வேண்டுமென்பதுதான் ஒற்றை லட்சியம். அந்த லட்சியத்திற்கு இன்றைக்கு தடையாக இருப்பது ‘இந்தியா’. ஜனநாயகப் பாதையில் செல்லும் வரை அந்த லட்சியத்தை அடைவது எளிதானதல்ல. எனவே இந்தியா பாரதமாக மாறும்போதுதான் இந்துராஜ்ஜியத்திற்கான பாதை தெளிவாகும். அதனால்தான் பாரதம் என்றே பயன்படுத்த வேண்டுமென்று மிக அழுத்தமாகக் கூறுகிறார் மோகன் பகவத். 2017-இல் ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் மத்தியில் மோகன் பகவத் பேசியது இன்னும் பொருத்தமாக இருக்கும். “ஜெர்மனி ஜெர்மானியர்களுடையது, அமெரிக்கா அமெரிக்கர்களுடையது. அதுபோல இந்தியா இந்தியர்களுடையது. அதற்காக மற்றவர்கள் இருக்கக்கூடாது என்று பொருள் அல்ல. இந்திய கலாச்சாரத்துடன் ஒத்து வாழ்பவர்கள் அனைவரையும் குறிக்கும் சொல் இது” என்றார். ஆக, இந்து கலாச்சாரத்தை பின்பற்றுபவர்கள் இந்தியாவில் இருக்கலாம், மற்றவர்களுக்கு இந்தியாவில் வாழ உரிமையில்லை என்பதுதான் மோகன் பகவத் பேச்சின் சாராம்சம். அதைத்தான் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் வாயிலாக நடைமுறைப்படுத்தத் துடிக்கிறது ஒன்றிய பாஜக அரசு.

### இசுலாமியர்களே ஆர்.எஸ்.எஸ்.-ஸின் முதல் எதிரி

இந்து மகாசாபையும் நீதிக்கட்சியும் சமகாலத்தில் தொடங்கப்பட்டவை. அடுத்த 10 ஆண்டுகளில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் உருவாகிவிட்டது. நீதிக்கட்சி எல்லோருக்கும் எல்லாம் என்ற சமத்துவக் கோட்பாட்டை ஏந்தியது. கல்வி, வேலைவாய்ப்பில் எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தை கொண்டிருந்தது. ஆனால் இந்து மகாசாபாவும், ஆர்.எஸ்.எஸ்.ஸும் இந்துக்களுக்காக ஒரு தேசம் அமைக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது. இந்தியா இந்துக்களின் நாடு என்பதில் ஆர்.எஸ்.எஸ்.ஸை தோற்றுவித்த ஹெட்கேவர் மிக உறுதியாக இருந்தார். இந்து தேசத்திற்கு எதிரிகளே முஸ்லிம்கள்தான் என்று பேசினார். முஸ்லிம்களை யவனப் பாம்புகள் என்று சாடினார்.

பிஷிக்கர் என்பவர் தருண் பாரத் பத்திரிகையில் ஹெட்கேவர், தீன் தயாள் உபாத்யாயா உள்ளிட்டோர் குறித்து எழுதியுள்ளார். அதில் ஆர்.எஸ்.எஸ்.ஸின் இலக்குகள் என்ன என்பதை மிகத் தெளிவாக எழுதியுள்ளார். சிறுபான்மை ஆணையத்தை மூடுவது, காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து வழங்கும் பிரிவு 370-ஐ நீக்குவது, சிறுபான்மை அமைப்புகளால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களுக்கு வெளிநாட்டு நிதி கிடைப்பதை தடுப்பது போன்றவற்றை லட்சியங்களாக அவர் குறிப்பிட்டுள்ளார். 10 ஆண்டுகால பாஜக ஆட்சியில் சிறுபான்மை ஆணையம் செயலிழந்துவிட்டது, பிரிவு 370 நீக்கப்பட்டுவிட்டது, சிறுபான்மை அமைப்புகள் வெளிநாட்டு நன்கொடைகள் பெறுவது மிகக் கடுமையாக்கப்பட்டிருக்கிறது.

ஆர்.எஸ்.எஸ். எத்தகைய அபாயமான அமைப்பு என்பதற்கு அந்த அமைப்பு உருவான காலத்தில் இருந்தே எச்சரிக்கைகள் இருந்துகொண்டே உள்ளன. 1932-இல் தசரா கொண்டாட்டத்தை ஒட்டி ஆர்.எஸ்.எஸ். நடத்திய பேரணி தொடர்பாக உளவுத்துறை அப்போது ஒரு அறிக்கையை அரசிடம் கொடுத்தது. “இந்தியாவின் அரசியல் எதிர்காலத்தை இந்துக்கள் மட்டுமே தீர்மானிக்க முடியும். மற்றவர்கள் தலையீட்டை பொறுத்துக்கொள்ள முடியாது” என ஹெட்கேவர் பேசியதாக உளவுத்துறை அறிக்கை அளித்தது. 1940-இல் அதிகாரிகள் பயிற்சி முகாமில் ஹெட்கேவர் பேசும்போது, “இங்கே ஒரு குட்டி இந்து ராஜ்ஜியத்தையே காண்கிறேன்” என்று கூறியிருக்கிறார். இது ஆர்.எஸ்.எஸ். எத்தனை ஆபத்தான அமைப்பாக வளர்ந்து வந்தது என்பதை உணர்த்துகிறது.

ஹெட்கேவர் மறைவுக்குப் பிறகு கோல்வாக்கர் காலத்தில்தான் ஆர்.எஸ்.எஸ். வளர்ச்சி வேகமெடுத்தது. ஹெட்கேவர் காலத்தில் 50 சாகாக்கள் இருந்த நிலையில், கோல்வாக்கர் காலத்தில் 1,000ஆக அதிகரித்தது. உறுப்பினர்கள் எண்ணிக்கை 1 லட்சத்தில் இருந்து 10 லட்சமாக அதிகரித்தது. 1946- 47 வரையிலும் ஆர்.எஸ்.எஸ். பணிகள் பெரும்பாலும் ரகசியமாகவே இருந்தன. பிரிட்டிஷ் அரசுக்கு ஆதரவு, காங்கிரஸ் எதிர்ப்பு நிலைப்பாடுதான் ஆர்.எஸ்.எஸ். கொள்கையாக இருந்தது. ஏனெனில் இன்னும் சிறிது காலத்தில் நாட்டை விட்டுப் போகப்போகிற ஆங்கிலேயர்களை ஏன் வீணாக எதிர்க்க வேண்டும்? இந்துராஜ்ஜியத்திற்கு முஸ்லிம்களே முதல் எதிரி என்ற சிந்தனைப்போக்கைக் கொண்டிருந்தது ஆர்.எஸ்.எஸ்.

### அன்றே எச்சரித்த உளவுத்துறை

நாக்பூரில் மத்திய, மாகாண அரசுகளிடம் சமர்பிக்கப்பட்ட ஒரு அறிக்கை, ஆர்.எஸ்.எஸ். எத்தகைய பயங்கரவாத அமைப்பு என்பதை தெளிவுபடுத்தியது. “ஆர்.எஸ்.எஸ். மேலும் தயாராகும் வரை, அவர்களுடைய தலையீட்டுக்கு உகந்த சூழல் உருவாகும் வரை அமைதிகாப்பார்கள். அதுதான் அவர்களின் தந்திரம்” என்று அந்த அறிக்கை சொன்னது. தற்போதைக்கு சங் பரிவார் அபாயமற்றதாக இருக்கலாம், ஆனால் மதக் கலவரம் நடக்கும் சமயத்தில் மிக மோசமாக மாறலாம் என்றும் அந்த அறிக்கை எச்சரித்தது.

ஏனென்றால் ஆர்.எஸ்.எஸ். தன்னுடைய இந்துராஜ்ஜிய கனவை அடைய தேர்ந்தெடுத்த வழி மிக ஆபத்தானது. ஹிட்லர், முசோலினியின் கொள்கைகளின் வழியில் இந்துராஜ்ஜியத்தை அடைவது எளிதானது என்று கருதினார்கள். அவர்களின் சிந்தனைகளை உள்வாங்கினார்கள். இத்தாலிய அறிஞரான மார்சியா கேசலோரி இந்த கோணத்தில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். டெல்லி தேசிய ஆவணக் காப்பகத்தின் தரவுகள் மற்றும் ரோம் நகரில் இருந்து திரட்டப்பட்ட ஆதாரங்களை ஒப்பிட்டு இந்த கட்டுரையை அவர் எழுதினார். அந்த கட்டுரையின் தலைப்பே, “1930-களில் இந்துத்துவத்தின் அந்நியக் கூட்டணி; ஆவணக் காப்பகச் சான்று” என்பதுதான்.

குறிப்பாக மூஞ்சே 1931-இல் இத்தாலி சென்று முசோலினியை சந்தித்தார். அதற்குப் பிறகுதான் இந்துராஜ்ஜியத்தின் எதிரி இசுலாமியர்கள் என்று உறுதிபட இலக்கு நிர்ணயித்து ஆர்.எஸ்.எஸ். அமைப்பு செயல்படத் தொடங்கியது. ஆர்.எஸ்.எஸ். சாகாக்களில் இத்தாலியில் இருந்த பாசிச இளைஞர் அமைப்பின் செயல்திட்டங்கள் உட்புகுத்தப்பட்டன. சாகாக்களில் மாணவர்களை வயது வாரியாக பிரித்ததும் அதனடிப்படையில்தான். சாகாக்களில் ஆயுதம் கொடுப்பதைப் போலவே, பாசிச இளைஞர் குழுக்களும் மாணவர்களை ஆயுதமேந்த வைத்தன. இவ்வாறு நாஜிக்கள், பாசிச குழுக்களிடம் இருந்த பல ஒற்றுமைகள் ஆர்.எஸ்.எஸ்.ஸிடமும் காணப்படுகின்றன.

சாவர்க்கர் இன்னும் பல படி மேலே போய் மக்கள் மத்தியில் வெறுப்பை விதைத்தார். “முஸ்லிம்களுக்கோ, கிறித்தவர்களுக்கோ இது

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# சென்னை, மதுரை, கோவையில் கழகம் பரப்புரை

**சென்னை :** இந்தியா கூட்டணியின் தென் சென்னை மக்களவைத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து வேளச்சேரி, தரமணி உள்ளிட்ட இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றது.

இதில் உமாபதி - கார்மேகம் - பொன்ராஜ் குழுவின் அரசியல் நையாண்டி நிகழ்ச்சி நடைபெற்றது. கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், எட்வின் பிரபாகரன், அன்னூர் விஷ்ணு ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

**மதுரை :** இந்தியா கூட்டணியின் மதுரை மக்களவைத் தொகுதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வேட்பாளர் சு.வெங்கடேசனை ஆதரித்து மதுரை மாவட்டக் கழக சார்பாக 16.04.2024 அன்று அழகர் கோவில், கிடாரிப்பட்டி, வள்ளாலபட்டி, சாணிப்பட்டி, கருங்காலக்குடி, கொட்டாம்பட்டி, தும்பைப்பட்டி, சந்தைப் பேட்டை, நொண்டிகோவில் பட்டி, மேலூர் உள்ளிட்ட கிராமப்புறங்களில் பரப்புரை செய்தனர்.

இதில் மாவட்டச் செயலாளர் மா.பா.மணிஅமுதன், மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி, மேலூர் பொறுப்பாளர் சத்திய மூர்த்தி, முருகேசன், ஆசிரியர் நடராசன், பிரகாஷ், சந்துரு உள்ளிட்ட கழகத் தோழர்களும், பவானி, அழகர், CPM உள்ளிட்ட தோழமை இயக்கத்தினர் பங்கேற்றனர்.

**கோவை :** இந்தியா கூட்டணியின் கோவை மக்களவைத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் கணபதி ராஜ்குமாரை ஆதரித்து கோவை மாநகர் மாவட்டக் கழக சார்பில் பாப்பநாயக்கன் பாளையம், பழையூர் பேருந்து நிறுத்தம், நியூ சித்தாபுதூர் ஜெயா பேக்கரி, காந்திபுரம் பிரசன்ன லட்சுமி பேக்கரி, காந்திபுரம், விஜயா பதிப்பகம் முன்பு, சிவானந்த காலனி கிருஷ்ணா பேக்கரி உள்ளிட்ட இடங்களில் தேர்தல் பரப்புரை செய்தனர்.

இதில் கோவை மாவட்டக் கழகச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம், மாநகரத் தலைவர் நிர்மல் குமார், மாநகரச் செயலாளர் வெங்கடேசன், தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் திருப்பூர் மகிழவன் உள்ளிட்டோர் உரையாற்றினார்கள்.

## எதிர்வரும் நிகழ்வு




இயக்கத்தின் கருப்பு மெழுகுவர்த்தி, கழக செயல்வீரர் தோழர் பத்ரி நாராயணன் அவர்களின் 20ஆம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி ஏப்ரல் 30ஆம் தேதி காலை 9 மணியளவில் மயிலாப்பூர் மயானத்தில் உள்ள அவரது நினைவிடத்தில் மரியாதை செலுத்தப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து இராயப்பேட்டை பத்ரி நாராயணன் நினைவுப் படிப்பகம் முன்பு நினைவேந்தல் கூட்டம் நடைபெறுகிறது

எனவே தோழர்கள் அனைவரும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

**இரா.உமாபதி**
**மாவட்டச் செயலாளர் – சென்னை**
**திராவிடர் விடுதலைக் கழகம்**

## தோழர் சி.சுப்பிரமணியன் மறைந்தார்
## சடங்குகளை மறுத்து உடல் அடக்கம்



சேலம் : திராவிடர் விடுதலைக் கழகத் தோழர், கொளத்தூர், அய்யம்புதூர் சி.சுப்பிரமணியன் அவர்கள் 21.04.2024 அன்று முடிவெய்தினார்.

அவரது உடலை கழகப் பெண் தோழர்கள் சுமந்து சென்று இறுதி ஊர்வலத்தை முன்னின்று நடத்தினார்கள். இறுதி ஊர்வலத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திராவிடர் விடுதலைக் கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள், தோழமை இயக்கத் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமாக கலந்து கொண்டனர்.

இறந்தவர்களின் உடலை பெண்கள் சுமக்க கூடாது. சுடுகாடு வரை பெண்கள் வரக்கூடாது என்ற மூடத்தனத்தை மறுத்து, ஜாதி – மத சடங்குகளை மறுத்து பெண்களே முன்னின்று இறுதி நிகழ்வுகளை நடத்தியது அப்பகுதியில் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

தொடர்ந்து மாலை 5 மணிக்கு மறைந்த சி.சுப்பிரமணியம் அவர்களின் படத்திறப்பு – நினைவேந்தல் நிகழ்வு அவரது இல்லத்தில் நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மறைந்த தோழர் சி.சுப்பிரமணியன் படத்தை திறந்துவைத்து நினைவேந்தல் உரையாற்றினார்.

இந்நிகழ்வில் கழக ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திகசோதி, குடும்ப உறவினர் ஆசிரியர் ரவி, கழக சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் கு.சூரியகுமார், கழக தலைமைக்குழு உறுப்பினர் காவை.ஈசுவரன், கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி ஆகியோர் பங்கேற்றனர். நிறைவாக அவரது பேரன் ரோகித் நன்றி கூறினார். இந்நிகழ்வில் கழகத் தோழர்கள், வி.சி.க, தமிழ்ப்புலிகள் கட்சி மற்றும் உறவினர்கள் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## கழக செயல்வீரர் போரூர் விக்னேஷ் மறைவு



சென்னை மாவட்டக் கழக செயல்வீரர் போரூர் விக்னேஷ் கடந்த ஆண்டு கழகத்தில் இணைந்த நாள் முதலே கழகம் நடத்திய ஒவ்வொரு நிகழ்வுகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். ஐடி ஊழியர், வாசிப்பில் மிகுந்த ஆர்வம் கொண்டவர் தோழர் விக்னேஷ். அவர் 16.04.2024 அன்று முடிவெய்தினார்.

போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த தோழர் விக்னேஷின் உடலுக்கு கழகத்தின் சார்பில் சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் தோழர் உமாபதி, எட்வின் பிரபாகரன், இரண்யா, அருண்குமார், அன்னூர் விஷ்ணு, அட்டி அருண், புகழ் ஆகியோர் இறுதி மரியாதை செலுத்தினார்கள். சொந்த ஊரான திண்டிவனத்தில் தோழர் விக்னேஷின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

3ஆம் பக்கத் தொடர்ச்சி

தாய்நாடு இல்லை. அரேபியாவோ, பாலஸ்தீனியமோதான் உங்களுக்கு தாய்நாடு. இது தந்தை நாடுதான் உங்களுக்கு. எனவே நீங்கள் தாய் மதம்" திரும்ப வேண்டுமென்று வெளிப்படையாகப் பேசினார் சாவர்க்கர். ஒரு தூய்மையான இந்து தேசியம் என்றால் என்ன என்று bunch of thoughts-இல் விவரித்து விளக்கியிருப்பார் கோல்வாக்கர்.

### இந்துக்களுக்கே எதிரானது இந்துராஜ்ஜியம்

ஆனால் இங்கே நாம் கவனிக்க வேண்டியது, இந்துராஜ்ஜியம் என்பது ஏதோ இசுலாமியர்களுக்கு மட்டும் எதிரானது அல்ல. அது பெரும்பான்மை இந்துக்களுக்கு எதிரானது. பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட இந்துக்களுக்கான ராஜ்ஜியமாக ஒருபோதும் இருக்காது. பார்ப்பனர்களுக்கான நலன் பேணும் ஒரு ராஜ்ஜியமாகவே அது இருக்கும் என்பதுதான் வரலாற்றில் இருந்து நாம் பெறும் எச்சரிக்கை. இந்துராஜ்ஜியம் என்பது அரசியலுக்காக பெரும்பான்மை இந்துக்களை அணிதிரட்ட பயன்படுத்தப்படும் வார்த்தை. உண்மையில் ராமராஜ்ஜியம் என்பதுதான் சரியான பெயர்.

ராமராஜ்ஜியத்தில்தான் சூத்திரனான சம்பூகன் தவம் இருந்ததற்காக, பார்ப்பனர் முறையீட்டின் அடிப்படையில் ராமனால் கொல்லப்பட்டார். ராமன் 14 ஆண்டுகள் வனவாசம் செல்லும் முன், தனது சகோதரனிடம் பார்ப்பனர்களுக்கு எந்த குறையும் இல்லாமல் பார்த்துக்கொள் என்று கட்டளையிட்டுச் சென்றார். வனத்திற்குள் தன்னை பார்க்க வந்த சகோதரனிடம், நாட்டில் பிராமணர்கள் சுபிட்சமாக இருக்கிறார்களா என்று கேட்டதாக வால்மீகியின் ராமாயணம் சொல்கிறது. அதுமட்டுமா பவுத்தர்கள் போன்ற நாத்திகர்களிடம் நீ பழகாமல்தானே இருக்கிறாய்? திருடனும் நாத்திகனும் ஒன்று என்றெல்லாம் ராமன் அறிவுறுத்தியதாகவும் ராமாயணம் சொல்கிறது. இப்படிப்பட்ட பாரபட்சமான பார்ப்பன நலன் பேணும் ஆட்சியைத்தான் ராமராஜ்ஜியம் என்று சங்கிகள் பெருமை பேசுகிறார்கள்.

கடந்த 10 ஆண்டுகால பாஜக ஆட்சியிலும் கூட பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மற்றும் சிறுபான்மை மக்களின் கல்வி, வேலைவாய்ப்பு உரிமைகள் பறிக்கப்பட்டுவிட்டன. ஆனால் உயர்ஜாதி ஏழைகளுக்கான 10% இடஒதுக்கீட்டை ஒரே நாளில் நிறைவேற்றிவிட்டார் நரேந்திர மோடி. இந்த 10 ஆண்டுகால பாஜக ஆட்சியில் பாதிப்படையாத ஒரே சமூகம் பார்ப்பன சமூகம்தான். ஆக, இந்த மோடி ஆட்சி ராமராஜ்ஜியத்தை நோக்கி மெல்ல நகர்ந்து கொண்டிருக்கிறது. அதை வேகப்படுத்த வேண்டுமென்றால் இந்தியாவாக இருந்தால் சரிவராது. அதனால் பாரதமாக மாற்றிவிட வேண்டுமென்று துடிக்கிறார்கள். பாரதமாக மாறிவிட்டால் அரசியலமைப்புச் சட்டம் இருக்காது, அரசியலமைப்புச் சட்டம் இல்லாவிட்டால் ஜனநாயகம் இருக்காது. ஜனநாயகம் இல்லாவிட்டால் கருத்துரிமை இருக்காது. கருத்துரிமை இல்லாவிட்டால் ஒன்றிய அரசை எதிர்த்து நியாயமான குரல்களைக் கூட எழுப்ப முடியாது. ஆகவே பாரதத்தை எதிர்த்து இந்தியாவின் பக்கம் நிற்க வேண்டியது காலத்தின் கட்டாயம். அந்த அடிப்படையில் பாரதத்திற்கு எதிராக, ஜனநாயக இந்தியாவின் பக்கம் நிற்கிறோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted April 26, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran